

கோவை ஆர்எஸ்.புரத்தில் ரூ9.67 கோடி மதிப்பீட்டில் உலகத்தரம் வாய்ந்த சர்வதேச ஹாக்கி மைதானம் பணிகள் துவங்கப்பட உள்ளது. அதையும் மற்றும் மாதிரி பள்ளி விடுதி கட்டிடத்தை தமிழ்நாடு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் செந்தில் பாலாஜி ஆய்வு மேற்கொண்டார்.



பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பலியான மல்லிப்பட்டினம் அரசு பள்ளி ஆசிரியை செல்வி. ரமணி உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தி, அவரது குடும்பத்தினருக்கும், ஆசிரியப் பெருமக்களுக்கும் ஆறுதலை தெரிவித்தார்.

### கள்ளக்குறிச்சி விவகாரம் - நீதிமன்ற அறிவிப்புக்கு

# மேல்முறையீடு செய்ய முதல்வரை கலந்து ஆலோசித்து முடிவெடுக்கப்படும்!

## புதுக்கோட்டையில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

புதுக்கோட்டை, நவ.22 –

புதுக்கோட்டையில் செய்தியாளர்களிடம் பேசிய சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, கள்ளக்குறிச்சியில் அந்த சம்பவம் நடந்த உடனேயே மூன்று அமைச்சர்களை அந்த இடத்திற்கு அனுப்பி அவர்களுக்கு உதவி மட்டும் உயர் சிகிச்சைகள் எல்லாம் அமைச்சர்கள் பரிந்துரை அடிப்படையில் செய்ததுதான். முதல்வர் ஓய்வு பெற்ற நீதிபதி கோகுல்தாஸ் தலைமையில் ஒரு குழு அமைத்து விசாரணை கமிஷன் அமைத்து அந்த குழு விசாரணை செய்து வருகிறது. மேலும் சிபிசிஐடி போலீசார் எல்லா இடங்களிலும் சிறப்பாக செயல்பட்டு பல்வேறு ஆதாரங்களை திரட்டி யாரெல்லாம் இந்த சம்பவங்களுக்கு காரணமாக இருந்தார்கள் என்பதை கண்டுபிடித்து அந்த பணியை மிகச் சிறப்பாக செய்து வருகிறார்கள்.

இந்த நிலையில் உயர் நீதிமன்றத்தில் மணிப்பூருக்கு உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக அறிவிக்கப் பட்டிருக்கின்ற நீதிபதி இந்த வழக்கை சி.பி.ஐ.க்கு மாற்றம் செய்துள்ளது மிகவும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது

நீதிபதியை விமர்சிக்கின்ற உரிமை நமக்கு கிடையாது .

தமிழக அரசு ஸ்காட்லாந்து போலீசுக்கு இணையாக பாராட்டப்படுகிற அமைப்பாக உள்ளது.

எந்த வழக்கையும் தமிழக காவல்துறையினர் சிறப்பாக செயல்பட்டு நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

தமிழக முதல்வர் இந்த வழக்கை உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்வதற்கு சட்ட நிபுணர்களோடு கலந்து ஆலோசித்து ஒரு நல்ல முடிவை எடுப்பார்.

கள்ளக்குறிச்சி விவகாரத்தில் நீதிமன்றம் அளித்துள்ள இந்த தீர்ப்பு 2026 தேர்தலில் தி.மு.க.விற்கு எந்த



வித பின்னடைவும் ஏற்படுத்தாது.

அந்த பகுதியில் உள்ள மக்கள் நாங்கள் உரிய நடவடிக்கை எடுத்து உள்ளோம் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு சில அரசியல் கட்சிகள் இந்த வழக்கை தொடுத்திருந்தனர். இந்த விவகாரத்தில் தி.மு.க.வைச் சேர்ந்த ஒருவருக்கு கூட சம்பந்தம் கிடையாது. தொடர்புடையவர்கள் கிடையாது. அப்படியே தொடர்பு இருப்பதாக தெரிந்தால் முதல்வர் உடனடியாக அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பார்கள் .

மணிப்பூருக்கு அவர் தலைமை நீதிபதியாக தற்போது நியமிக்கப்பட்டுள்ளார் என்று தான் நான் கூறினேனே தவிர அவருடைய தீர்ப்பு குறித்து அவர் குறித்து எந்த விதமான விமர்சனமும் நான் செய்யவில்லை .

இந்த வழக்கில் அனைத்து வாதங்களையும் நாங்கள் எடுத்து வைத்துள்ளோம். அதை ஏற்றுக் கொள்வதும் ஏற்றுக் கொள்ளாததும் நீதிபதியை பொறுத்தது.

எத்தனையோ உயர் நீதிமன்ற தீர்ப்புகள் உச்ச நீதிமன்றத்தில் மாற்றப்பட்டுள்ளன. இந்த தீர்ப்பு மாற்றப் படக்கூடிய தீர்ப்புதான் .

உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீட்டில் முறையான வாதங்களை எடுத்துரைத்து தடுத்து நிறுத்துவோம்.

மேல்முறையீடு எப்போது செல்வது என்று முதல்வர் முடிவு செய்வார்.

நடிகை கஸ்தூரி விவகாரத்தில் அவருக்கு ஜாமீன் வழங்க வேண்டும் என்று உயர்நீதிமன்ற நீதிபதியின் மனைவி கூறியுள்ளது குறித்த கேள்விக்கு பதில் அளித்த அமைச்சர் இது குறித்து சட்டத்துறை சட்ட வழக்கறிஞர்கள் தங்களுடைய நிலையை எடுத்துரைப்பார்கள். நீதிமன்றம் முடிவு செய்யும்.

மத்திய அரசு கொண்டுவந்துள்ள புதிய சட்ட நடவடிக்கைகளை எதிர்த்து தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி வழக்கறிஞர் சங்கம் கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பு சென்னையில் கூட்டத்தை நடத்தியது. இதில் நான் கலந்து கொண்டு இந்த மூன்று சட்டங்களும் தேவை இல்லை என்பது தமிழக அரசு நிலைப்பாடு .

ஏற்கனவே இதை கடிதங்கள் மூலமாக நாங்கள் மத்திய அரசுக்கு தெரிவித்து இருக்கிறோம்.

மத்திய அரசு கொண்டுவந்துள்ள அனைத்து சட்டங்களையும் மாநில அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கட்டாயம் கிடையாது. இதை நான் கூட்டத்தில் பேசினேன். இதற்காக என் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும், அமைச்சர் பதவியில் இருந்து விலக வேண்டும் என்று பா.ஜ.க. துணை தலைவர் வி.பி. துரைசாமி கூறியுள்ளார்.

சட்டங்கள் தேவை இல்லை என்று நாங்கள் கூறுவதற்கு உரிமை உண்டு. கள்ளக்குறிச்சி விவகாரத்தில் எந்த மர்மமும் கிடையாது. மர்மம் இருந்தால் தானே முடிப்பு அவிழ்ப்பதற்கு. தமிழகத்தில் பூரண மதுவிலக்கு வேண்டும் என்பது தான் நிலைப்பாடு. அதற்காகத் தான் திருமாவளவன் நடத்திய மாநாட்டில் நாங்கள் கலந்து கொண்டோம். ஆனால் ஒரு மாநிலத்திற்கு மட்டும் பூரண மதுவிலக்கு என்பதை நடைமுறைப்படுத்த முடியாது. அனைத்து மாநிலங்களுக்கும் மத்திய அரசு பூரண மதுவிலக்கு சட்டத்தை கொண்டு வர வேண்டும். பூரண மதுவிலக்கு வேண்டும் என்று ஒரு சிலரும் வேண்டாம் என்று ஒரு சிலரும் கூறி வருகின்றனர்.

இருவரையும் நாங்கள் திருப்திபடுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். முதல்வர் மதுவிலக்கை கொண்டு வருவதற்கு தயார். டாஸ்மாக்கினால் வரும் வருமானம் அரசுக்கு தேவையில்லை.

மது விற்பனை அமலில் இருக்கும் போது கள்ளச்சாராயம் விற்பனை செய்யப்படுகிறது என்ற கேள்விக்கு பதில் அளித்த அமைச்சர் அங்கொன்றும் இங்கொன்றுமாக நடக்கும் விஷயங்களை வைத்துக் கொண்டு நாம் கருத்து கூற முடியாது.

தி.மு.க. 200 தொகுதிகளில் வெற்றி என்ற இலக்கை எட்டும். அந்த இலக்கை இன்றிலிருந்து தொடங்குவதற்காக தான் தேர்தல் பணி இன்றிலிருந்து தொடக்கம் என்று முதல்வர் கூறியுள்ளார்.

இன்றைக்கு அ.தி.மு.க. உள்ளதா? தற்போது கட்சி சுக்குநூறாக போய்க் கொண்டுள்ளது.

திண்டுக்கல் சீனிவாசன் நேற்று கூட்டணி வைப்பதற்கு சீட்டுகளையும் கேட்டு ஐம்பது கோடி, நூறு கோடி ரூபாய் அதிமுகவிடம் சிலர் பேரம் பேசுவதாக கூறியுள்ளது குறித்த கேள்விக்கு பதில் அளித்த எஸ்.ரகுபதி அவர்களோடு கூட்டணி சேர்வதற்கு யார் முயன்றாலும் இந்த பதிலால் அவர்கள் கூட்டணி சேர மாட்டார்கள்.

எந்த கட்சியும் இதுபோன்று அம்பது கோடி கொடு, 100 கோடி கொடு என்று கேட்பது கிடையாது.

இவ்வாறு அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

### உலகத்தரம் வாய்ந்த ஹாக்கி மைதானம் துவங்கப்பட உள்ளது!

# மின் மாற்றி கொள்முதல் செய்யப்பட்டதில் யாருடைய தலையீடும் இல்லை!

## கோவையில் அமைச்சர் செந்தில்பாலாஜி பேட்டி!

கோவை, நவ. 22 -

கோவை ஆர்எஸ்.புரத்தில் ரூ9.67 கோடி மதிப்பீட்டில் உலகத்தரம் வாய்ந்த சர்வதேச ஹாக்கி மைதானம் பணிகள் துவங்கப்பட உள்ளது. அதை தமிழ்நாடு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் செந்தில்பாலாஜி ஆய்வு மேற்கொண்டார். மற்றும் மாதிரி பள்ளி விடுதி கட்டிடத்தை ஆய்வு செய்தார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்தார். அவர் கூறுகையில்,

தமிழகத்தை விளையாட்டு தலைநகராக்கும் வகையில் விளையாட்டு துறை அமைச்சர் செயல்பட்டு வருகின்றார். ஹாக்கி வீரர்கள் கோரிக்கை ஏற்று ஹாக்கி மைதானம் அமைக்கும் பணிகள் துவங்கியுள்ளது.

அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குள் பணிகள் நிறைவடையும். ரூ900 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாதாள சாக்கடை பணிகள் நடைபெறுகின்றது. புதிய பணிகளும் ஆய்வு செய்யப்படுகின்றது.

கோவையின் வளர்ச்சிக்காக ரூ200 கோடி ரூபாயினை தமிழ்நாடு முதலமைச்சர் அறிவித்துள்ளார்.

போர்க்கால அடிப்படையில் பணிகள் நடைபெறும் என கூறியவர், ஏற்கனவே முதல்வர் சர்வதேச கிரிக்கெட் மைதானம் குறித்து அறிவித்துள்ளார். விரைவில் அதற்கான பணிகள் துவங்கப்பட்ட உள்ளது.

கடந்த ஆட்சியில் சாலைகள் போடாமல் விட்டதால் இப்போது சாலை பணிகளுக்காக கோரிக்கை விடுத்துள்ளனர். அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றது. ரூ 200 கோடி நிதி ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளது. இப்போது மீண்டும் ரூ200 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது.

மின் மாற்றி கொள்முதல் செய்யப்பட்டதில் மின்வாரியத்தில் கடந்த காலங்களில் என்ன நடைமுறைபின்பற்றப்பட்டதோ அந்த நடைமுறைதான் இப்போதும் பின்பற்றப்படுகின்றது.

அதில் எந்த விதமான தவறுகளும் நடைபெறவில்லை. இதில் வேறு யார் தலையீடும் இல்லை. ஆன்லைன் முறைப்படியே விதிமுறைகளுக்கு உட்பட்டு ஒப்பந்தம் கோரப்பட்டு பணிகள் நடந்துள்ளது. இதற்கான குழுவில் அனைத்து அதிகாரிகளும் உள்ளனர் என்று அமைச்சர் செந்தில் பாலாஜி கூறினார்.

இந்த நிகழ்ச்சிகளில், மாவட்ட ஆட்சியர் கிராந்திகுமார் பாடி, மேயர் ரங்கநாயகி, மாநகராட்சி ஆணையாளர் சிவகுரு பிரபாகரன், மாவட்டச் செயலாளர்கள் நா.கார்த்திக், தொ.அ.ரவி, தளபதி முருகேசன், கணபதி ராஜ்குமார், எம்பி,துணைமேயர் வெற்றிச்செல்வன், முன்னாள் எம்பி நாகராஜ், முன்னாள் மாவட்ட செயலாளர் சிஆர்.இராமச்சந்திரன், பகுதி கழக செயலாளர் கார்த்திக் செல்வராஜ் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஏர்போர்ட் ராஜேந்தர் மேற்கு மண்டல தலைவர் தெய்வானை தமிழ்மறை, பணிகள் குழு தலைவர் சாந்திமுருகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. வர்த்தகர் அணி

# மாநில நிர்வாகிகள் - மாவட்ட தலைவர்கள் - அமைப்பாளர்கள் கூட்டம்!

## தி.மு.க. வர்த்தகர் அணிச் செயலாளர் கவிஞர் காசி முத்துமாணிக்கம் அறிவிப்பு!

தி.மு.க. வர்த்தகர் அணி மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட தலைவர்கள் - அமைப்பாளர்கள் கூட்டம் 25.11.2024 திங்கட்கிழமை காலை 11.00 மணியளவில் அண்ணா அறிவாலயத்திலுள்ள கழக அலுவலகத்தில் எனது தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட தலைவர்கள் - அமைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:- 1. தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள்;

2. கழக ஆக்கப் பணிகள் - குறித்து.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18
நாள்- 20.11.2024

**காசி முத்துமாணிக்கம்**
செயலாளர்
தி.மு.க. வர்த்தகர் அணி

### முதல்வரின் தொடர் சீரிய நடவடிக்கையால் – கிராம – நகர்ப்புறங்களுக்கு

# கூட்டுறவுச் சங்கங்கள் முதுகெலும்பாக விளங்குகின்றன!

## தஞ்சையில் நடைபெற்ற கூட்டுறவு விழாவில் உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் பேச்சு!

தஞ்சை, நவ. 22 –

தஞ்சையில் நடைபெற்ற 71–வது அனைத்திந்திய கூட்டுறவு விழா வில் உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் பேசியதாவது:–

71–ஆவது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா கொண்டாட்டத்திற்கு என்னை அழைத்தமைக்கு முதற்கண் வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் சமூக, பொருளாதார மேம்பாட்டில் கூட்டுறவின் பங்கு குறித்து இந்த கூட்டுறவு வார விழா 4.11.2024 முதல் நடைபெற்று வருகிறது.

ஆண்டுதோறும் முன்னாள் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்த நாளான நவம்பர் 14–ஆம் தேதி முதல் ஒரு வாரத்திற்கு தேசிய கூட்டுறவு வார விழா கொண்டாடப்பட்டு வருகிறது.

கூட்டுறவு என்பது பேரறிஞர் அண்ணா அவர்களால் பெரிதும் பாராட்டப்பட்ட ஒரு துறை. கூட்டு றவுக்குச் சின்னமாக வானவில்லின் வண்ணத்தை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் அமைத்துக் கொடுக்கப்பட்டது. வானவில்லில் பல வண்ணங்கள் ஒன்றுகூடி இருப்பதைப் போல இந்தக் கூட்டுறவு இருக்க வேண்டும். அதிலே காணுகின்ற அந்தப் பொலிவும் எழிலும் இந்தக் கூட்டுறவுத் துறையிலேயும் இருந்திட வேண்டும் என்ற நோக்கத்தோடு வானவில் லோகோ (Logo) அமைக்கப்பட்டது.

கூட்டுறவு என்பது காகங்கள் கூடி, இருப்பதைப் பகிர்ந்துகொண்டு போவதுபோல் அல்ல; கூட்டுறவு, காகங்கள் கூடுவதுபோல் இருக்கக் கூடாது. கூட்டுறவு மேகங்கள் கூடுவதைப் போல் இருக்க வேண்டும்.

மேகங்கள் கூடுவது மழையைத் தருவதற்காக, அதுபோல மக்களுக்கு நன்மைகளைக் கொடுப்பதற்காக, கூட்டுறவு இருக்க வேண்டும். அந்த வகையிலே இந்தக் கழக ஆட்சியில் கூட்டுறவுத் துறை நல்லமுறையில் செயல்படும் என்று குறிப்பிட்டார் முத்தமிழறிஞர் கலைஞர்.

கூட்டுறவு சங்கங்கள் கிராமப்புற பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்குவதோடு, கிராம மற்றும் நகர்ப்புறங்களில் கடன் பெறுவதற்கான வாய்ப்பு வழங்குகிறது. இந்தியாவில் கூட்டுறவு இயக்கத்தின் முன்னோடியாக தமிழ்நாடு போற்றப் படுகிறது.

இந்தியாவின் முதல் கூட்டுறவு கடன் சங்கம் 1904–ஆம் ஆண்டு திருவள்ளூர் மாவட்டம் திரூரில் தொடங்கப்பட்டது. அதனை நினைவு கூறும் வகையில் முதலமைச்சர் அவர்கள் திரூரில் ரூ.1 கோடி செலவில் கூட்டுறவு அருங்காட்சியகம் அமைக்க உத்தரவிட்டுள்ளார்.

தமிழ்நாட்டின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கு அரசின் புதிய செயல் திறன்மிகு திட்டங்கள் மூலம் கூட்டுறவை வலுப்படுத்துதல், காலத்திற்கு ஏற்ப கூட்டுறவின் புதிய முயற்சி கள் தொழில்நுட்பங்கள் மூலம் சிறந்த நிர்வாகம், கூட்டுறவின் மூலம் சுயதொழில் மேம்பாடு, வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் திறன் மேம்பாடு, இன்றைய சூழலுக்கு ஏற்ப கூட்டுறவு நிறு வனங்களை நவீனமயமாக்குதல், கூட்டுறவுகளிடையே ஒருங்கிணைப்பையும், பங்களிப்பை யும் வலுப்படுத்துதல், பெண்கள், இளைஞர்களின் பங்களிப்பை அதிகரித்தல் மற்றும் நலிந்த பிரிவினரின் பொருளாதார முன்னேற்றத்திற்கு கூட்டுறவின் பங்களிப்பு கூட்டுறவு சங்கங்கள் வாயிலாக நீடித்த வளர்ச்சி இலக்குளை அடைதல். ஆகிய தலைப்புகளின் கீழ் இந்த கூட்டுறவு வார விழா நடைபெற்று வருகிறது.

மாநில மாவட்ட அளவில் நடைபெறும் கூட்டுறவு தொடர்பான விழிப்புணர்வு கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் பொதுமக்களுக்கு ஏற்படும் நற்பயன்களை தெரிவிக்கப்படுகிறது.

கூட்டுறவு நிறுவனங்கள் வாயிலாக வழங்கப்படும் கடன் விவரம் பயிர் கடன், தானிய ஈட்டுக் கடன், கால்



நடை பராமரிப்பு கடன், மகளிர் சுய உதவிக்குழு கடன், மாற்றுத்திறனாளிக்களுக்கான கடன், வீடு கட்ட கடன், வீட்டு அடமான கடன், சிறுதொழில் கடன், டாம்கோ, தாட்கோ, டாப்செட்கோ கடன் ஆதரவற்ற விதவைக் கடன்/கைம்பெண் (ம) கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கான கடன், பணிபுரியும் பெண்கள் (ம) மகளிர் தொழில் முனைவோர் கடன்,

2006–ஆம் ஆண்டில் முத்தமிழறிஞர் கலைஞர் டசிப்பொறுப்பேற்றவுடன் 7000 கோடி விவசாயக் கடன்களை இரத்து செய்யப்பட்டது.

அவர் வழியில் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் கொரோனா பெருந்தொற்று காலத்திலும் 6000 கோடி நகைக் கடன்களை தள்ளுபடி செய்தார். மகளிர் சுயஉதவிக்குழு கடன்கள் 31.3.2021 –இல் நிலுவையில் இருந்த ரூ.2756 கோடி கடன்களை தள்ளுபடி செய்து உத்தரவிட்டவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள்.

பொங்கல் பண்டிகை முன்னிட்டு 1 கிலோ பச்சரிசி, முழுக்கரும்பு மற்றும் ரூ.1000 கூட்டுறவுத் துறை மூலம் வழங்கப்பட்டது. தஞ்சாவூர் மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையின் மூலம் 340 கூட்டுறவு நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றது. தஞ்சாவூர் மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையின் மூலம் பயனாளிகள் விவரம்

24–2023–ஆம் ஆண்டில் ரூ.540 கோடி வட்டியில்லா பயிர்கடன் –70,660 விவசாயிகள் பயன் ரூ.33 கோடி வட்டியில்லா கால்நடை பராமரிப்பு கடன் – 10,553 நபர்கள் பயன் 2024–25–ஆம் ஆண்டில் ரூ.270 கோடி வட்டியில்லா பயிர்கடன் –31,989 விவசாயிகள் பயன் ரூ.14 கோடி வட்டியில்லா கால்நடை பராமரிப்பு கடன் – 3,340 நபர்கள் பயன் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களை சேவை மையங்களாக மாற்றும் திட்டத்தின் கீழ் ரூ.8 கோடி மதிப்பீட்டில் 84 திட்டங்கள் 70 தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளன.

ரூ.5 கோடி மதிப்பீட்டில் 79 வேளாண் கருவிகளை குறைந்த வாடகையில் விவசாயிகள் பயன்படுத்த 56 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் வாயிலாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த கூட்டுறவுத் துறையின் கீழ் 177 சேமிப்பு கிடங்குகள் உள்ளன.

14 கூட்டுறவு மருந்தககங்கள் உள்ளன. இந்த நிதியாண்டில் 31.10.2024 வரை ரூ.300 கோடி தொகையிலான மருந்துகள் விற்பனை செய்யப்பட்டு ரூ.17 இலட்சம் இலாபம் ஈட்டப்பட்டுள்ளது.

1,245 கூட்டுறவு நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. அதன் மூலம் 7,11,804 குடும்ப அட்டைதாரர்கள் பயனடைந்து வருகின்றனர். 2023–க்குப் பிறகு 1000 குடும்ப அட்டைகளுக்கு மேல் உள்ள நியாய விலைக் கடைகளைப் பிரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின் மூலம் ஒரத்தநாடு வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் 500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட தானியக் கிடங்கு கட்டப்பட்டது. நாளது வரை ரூ.138 இலட்சம் அளவிற்கு தானிய ஈட்டுக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

Coop e–வாடகை’ செயலி

விவசாய பெருமக்களுக்குத் தேவைப்படும் விவசாய இயந்திரங்கள் மற்றும் கருவிகளை வாடகைக்கு பதிவு செய்யும் பொருட்டு Coop e–வாடகை’ செயலி உருவாக்கப் பட்டுள்ளது.

மேலும் ”உழவர் செயலி மூலமும் தங்கள் வட்டாரத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து விவசாய இயந்திரங்கள் வாடகைக்கு பெற்றுக்கொள்ளலாம்.

நூற்றாண்டுகளைக் கடந்து செயல்படும் செம்மையான அமைப்பாக கூட்டுறவு நிறுவனங்கள் உள்ளன. அவை காலத்தின் தேவைக் கேற்ப தங்களை புதுப்பித்துக் கொள்ளும் அவசியத்தை உணர்ந்து கூட்டுறவு நிறுவனங்களை நவீனப்படுத்த தமிழ்நாடு அரசு தொடர்ந்து பல திட்டங்களை தொடர்ந்து வழங்கி வருகின்றது. அவற்றில் குறிப்பிடத் தக்கவை,

அனைத்து கூட்டுறவு நிறுவனங்களையும் கணினிமயமாக்கல், அதன்மூலம் உறுப்பினர்களுக்கு வெளிப்படை யான விரைவான தரமான சேவை வழங்குதல்.

மக்களுக்கு தரமான கலப்படமற்ற பொருட்களை நியாயமான விலையில் வழங்கும் வகையில் பதப்படுத்தும் அலகுகள் அமைத்தல்

புதிய கட்டமைப்புகள் உருவாக்குதல் மற்றும் நவீனமயமாக்குதல் மூலம் கூட்டுறவு நிறுவனங்களை தொடர்ந்து புத்தாக்கம் செய்தல்.

இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் நமது மாநிலத்தில் மக்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்தை மேம்படுத்த கூட்டுறவுத் துறை அயராது பாடுபட்டு வருகிறது. இதன் சேவை மேலும் விரிவ டைந்து திண்டுக்கல்லில் கூட்டுறவுத் துறை சார்பில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கப்பட்டது.

கல்வி, மருத்துவம் (மலிவு விலையில் கூட்டுறவு மருந்தகங்கள்) இவை இரண்டும் என்னுடைய இரு கண்களாக பாவித்து வருவதாக முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார். முதலமைச்சரின் எண்ணத்தை நிறைவேற்றும் வகையில் கூட்டுறவுத் துறை தன்னை ஈடுபடுத்திக் கொண்டது பாராட்டத்தக்க ஒன்றாகும். கூட்டுறவே நாட்டுயர்வு. இச்சேவை மேலும் வளர என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் முனைவர் கோவி.செழியன் பேசினார்.

**பெருநகர சென்னை மாநகராட்சி**
**இயந்திர பொறியியல் துறை**

**கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள கண்காணிப்பு பொறியாளர் (இயந்திரம்) அவர்களால் மறு மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது**

**இ.பொ.து.ந.க.எண்.எம்1 / 1512B / 2024**
**5 எண்ணிக்கையில் Truck Mounted Crane-கள் 5 வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்புடன் கூடி கொள்முதல் செய்தல்**

முன்வைப்புத் தொகை : ஒப்ப படிவத்தில் தெரிவித்துள்ளபடி
ஒப்பம் சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம் **05.12.2024 பிற்பகல் 3.00, மணி**
ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் **06.12.2024 பிற்பகல் 3.30 மணி**
மேலும் விவரங்களுக்கு : **https://tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 5053 / ஒப்பந்தப்புள்ளி / 2024 **கண்காணிப்பு பொறியாளர் (இ)**



சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் நங்கவள்ளி ஒன்றியம், கருமலைக்கூடலில் உள்ள ஜே.கே.பி. மஹாலில், மாவட்ட அவைத்தலைவர் பி.தங்கமுத்து தலைமையில், சேலம் மேற்கு மாவட்டச் செயலாளரும், சேலம் நாடாளுமன்ற உறுப்பினருமான டி.எம்.செல்வகணபதி முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மேட்டூர் தொகுதி தலைமையிடப் பார்வையாளர் அ.ரியா, மாவட்ட துணைச் செயலாளர்கள் சம்பத்குமார், எலிசபெத்ராணி, பொருளாளர் பொன்னுசாமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் பூவாகவுண்டர், பொதுக்குழு உறுப்பினர்கள்அன்பழகன், காசிவிஸ்வநாதன், தங்கமணி, நகரச் செயலாளர்கள் காசிவிஸ்வநாதன், பாஷா, குப்பு (எ) குணசேகரன், செல்வம், ஒன்றியச் செயலாளர்கள் பரமசிவம், பாலகிருஷ்ணன், நல்லதம்பி, அர்த்தநாரீஸ்வரன், சீனிவாசப்பெருமாள், பச்சமுத்து, ராஜேஷ், பேரூர்ச் செயலாளர்கள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.